ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2079/14 - 2018 ජූලි මස 09 වැනි සඳුදා - 2018.07.09

*2079/14 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### ஹம்பாந்தோட்டை பிரதேச சபை

*களியாட்ட வரி அறவிடல் - 2018*

*(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (1) உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஹம்பாந்தோட்டை பிரதேச சபையினால் 24.07.2015 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இல. 6.1 இன் கீழ் நிறைவேற்றப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பிரேரணை 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய விநோத வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், தென் மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சர் குஸ்திஞ்ஞா வடு சான் விஜயலால் டீ சில்வா அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

குஸ்திஞ்ஞா வடு சான் விஜயலால் டீ சில்வா,
தென் மாகாண முதல் அமைச்சரும் நிதி, திட்டமிடல்,
சட்டமும் ஒழுங்கும், பொறியியல் சேவை, சுகாதார,
தேசிய வைத்திய, உள்ளூராட்சி, போக்குவரத்து மற்றும்
சுற்றுலா அமைச்சர்.

*முதல் அமைச்சர் அலுவலகம்,*
*காலி,*
*2018, மே 20.*

**பிரேரணை**

*(267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் அலுவல்களுக்காக ஏதேனும் களியாட்ட அலுவல் ஒன்றிற்காக ஹம்பாந்தோட்டை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் நடாத்தும் ஒவ்வொருவரினாலும் அக்களியாட்ட அலுவல்,*

*(அ) எல்லாக் களியாட்ட அலுவலின்போதும் அதற்காக அனுமதிக்கப்படும் ஒவ்வொருவரிடமிருந்தும் அறவிடப்படும் தொகையின் நூற்றுக்கு பத்து (10%) வீதத்திற்குச் சமமான தொகை ஒன்று.*

மேலே சொல்லப்பட்ட களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் களியாட்ட வரியாக அறவிட வேண்டும் எனவும், அக்களியாட்ட அலுவல் நடாத்தப்படும் தினத்திற்கு முன்னர் அச்சொல்லப்பட்ட களியாட்ட வரி ஹம்பாந்தோட்டை பிரதேச சபைக்குச் செலுத்தப்படல் வேண்டும் எனவும் ஹம்பாந்தோட்டை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

*07-771*

1A - PG 4108 — 10 (2018/07) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.